# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

## சட்ட பீடம்

## சட்டமாணிப் பரீட்சை, வருடம் III - 2018

# பகிரங்க சர்வதேசச் சட்டம்

(மூன்று மணித்தியாலங்கள்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 07

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடைதருக.

(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்)

---

1. 'சர்வதேசச் சட்டமானது வேறேதேனும் சட்டமுறைமையைப் போன்று, பயனாளிகள் அனைவரினதும் அக்கறைகளனைத்தையும் நிறைவேற்றக் கூடியதொன்றாக அமையமுடியாது. அது குறைபாடுடையதாகவும், குறித்தசில அதிகாரக் கட்டமைப்புக்களை வலிதாக்கிக் கொள்ளவும் நிலைபேறாக்கவும் வழக்கமாகச் செயலாற்றுகின்றது. அதேநேரம், அது பொதுநலன், தீங்கிலிருந்து நலப்படுத்தல் மற்றும் இலகுவில் பாதிக்கப்படுவோரின் பாதுகாப்பு என்பவற்றை நோக்கிய மனிதாபிமான ஆற்றலினது பிரதிபலிப்பொன்றுமாகும்.'

   சர்வதேசச் சட்டத்தின் வளர்ச்சியின் வரலாற்றுப் பின்னணியில் மேலுள்ள கூற்றினை ஆராய்க. அண்மைய சர்வதேச நிகழ்வுகளிலிருந்தான நிலையான உதாரணங்களினால் உமது விடையினை ஆதாரப்படுத்துக.

2. 'சர்வதேச ஆளுமையானது உரிமைகள் மற்றும் கடமைகளின் பண்பியல்புகளுடன் சேர்த்து சட்டத்தின் கீழான குறித்தசில தகைமைகளைக் கொண்டிருப்பதனை மாத்திரமன்றி, சட்டத்தை இயற்றுகின்ற ஆற்றலையும் உள்ளடக்கும்.'

   அமைப்புக்கூறுகளானவை (*entities*) சர்வதேசச் சட்டமுறைமையில் பங்குபற்றுவதற்குச் சர்வதேசச் சட்ட ஆளுமையைக் கொண்டுள்ளன என்றழைப்பதற்கு எத்தகைய செயன்முறைகள் உள்ளனவோ அவற்றுடன் விசேடமாகத் தொடர்புபடுத்தி ஆராய்க.

3. 'சர்வதேசச் சட்டத்தில் நியாயாதிக்கம் என்பது இறைமையுள்ள அரசுகளின் உரிமைகள் மற்றும் தத்துவங்கள் தொடர்பான தூய வினாவொன்றாகப் பாரம்பரியமாகக் கருதப்படுகின்றது. ஆயினும், சர்வதேசச் சட்டத்தின்கீழ் உரிமையொன்று என்பதனைவிட நியாயாதிக்கத்தின் பிரயோகமானது கடமை அல்லது கடப்பாடு என்பவற்றுடன் தொடர்புடைய வினாவாகலாம் என்பது தொடரான சூழ்நிலைகளில் வளர்ந்துருவாகின்ற அங்கீகாரங் கொண்டதாக இருப்பதனால், இது மீள்கருத்துருவாக்கமொன்றைச் செய்யவேண்டிய தேவையிருக்கலாம்.'

   நீர் உடன்படுகின்றீரா? அரசுகளினால் நியாயாதிக்கம் பிரயோகிக்கப்படுவதிலான பொருத்தமான உதாரணங்ளைச் சுட்டிக்காட்டி மேலுள்ள கூற்றினை நுணுக்கமாகப் பகுத்தராய்க.

4. அப்பேலா, பேரியானா மற்றும் கிறாப்பிஸ் ஆகியன புருட்டிக்கா என்ற கண்டத்திலுள்ள மூன்று அரசுகளாகும். சர்வதேசப் பொருத்தனைகள் சட்டம் தொடர்பில், அப்பேலாவானது இலங்கையின் சட்டப் பாரம்பரியத்தையொத்தவாறே பின்பற்றுகின்றது. இது தொடர்பில் பேரியானாவினது அரச நடைமுறையானது ஐக்கிய அமெரிக்காவினை ஒத்ததாகவுள்ள அதேவேளை, பொதுச்சட்ட மற்றும் கண்டத்திற்குரியவை கலந்த நெகிழ்ச்சியான அணுகுமுறையொன்றை கிறாப்பிஸ் பின்பற்றுகின்றது.

(i) அப்பேலாவானது தனது அரசியலமைப்பைத் திருத்துவதற்கு விரும்புவதுடன், அரசினால் ஏற்றங்கீகரிக்கப்படுதல் / பின்னிணைந்து கொள்ளுதல் என்பவற்றைத் தொடர்ந்து ஏதேனும் பொருத்தனை தொடர்பில் சட்டவாக்கசபை விளைவு கொடுப்பதனை எவ்வாறு உறுதிசெய்து கொள்ளலாம் என்பது தொடர்பில் உமது ஆலோசனையினை நாடுகின்றது.

(ii) சர்வதேசச் சட்டத்தை நாட்டுக்குள் பெற்றுக்கொள்ளுகின்றபோது, சட்டச்செயலூக் கத்துக்கும் சட்டவாக்க சபையின் அதியுயர் தன்மைக்கும் இடையில் சமநிலையொன்றை எவ்வாறு பேண முடியும் என்பது தொடர்பிலான உமது அபிப்பிராயத்தை பேரியானா நாடுகின்றது. அதனை செய்யமுடியும் என்பதனை நீர் எவ்வாறு பிரேரிப்புச் செய்வீர்?

(iii) சர்வதேசச் சட்டத்தின் அனுகூலங்கள் தனது பிரசைகளுக்குக் கிடைப்பதனை உறுதிசெய்து கொள்ளக்கூடியதான அத்தகைய சர்வதேசச் சட்டத்தைப் பெற்றுக் கொள்வதற்கான சிறந்த முறைமையொன்றை உருவாக்குவதற்கு, ஏனைய அரசுகளின் நடைமுறையினைப் பற்றி அறிந்துகொள்வதற்கு கிறாப்பிஸ் அரசாங்கமானது விரும்புகின்றது. பொருத்தமான நியாயாதிக்கங்களிலிருந்து அதிகார ஆதாரங்களைச் சுட்டிக்காட்டி தகவல்களைத் தருக.

5. **ஒன்றில் (அ) விற்கு அல்லது (ஆ) விற்கு விடை தருக.**

(அ) 'இராஜதந்திர விடுபாட்டுரிமையுடன் தொடர்புடையதான சட்டத்தை முழுமையாகச் சீர்திருத்துவதற்கான தேவையினை உணர்ந்துகொண்டமையே, 1961ஆம் ஆண்டின் வியன்னா சமவாயத்துக்கு முனைப்பாயமைந்தது. ஆயினும், இராஜதந்திர விடுபாட்டுரிமையானது எதிர்பார்க்கப்பட்ட அதன் அடிப்படைக் குறிக்கோள்களுக்குப் பயன்படுத்தப் படுகின்றதா என்பது விவாதத்துக்குரியதாகவே இருந்துவருகின்றது.'

இராஜதந்திர விடுபாட்டுரிமை தொடர்பான சர்வதேசச் சட்டத்தின் வரலாற்று வளர்ச்சி மற்றும் இராஜதந்திர தூதுவராலயப் பணிகள் பயனுறுதிமிக்க வகையிலமைவதனை உறுதிசெய்து கொள்வதற்கான தேவை என்பவற்றின் பின்னணியில் மேலுள்ள கூற்றின் மீது நுணுக்கமாகக் கருத்துரை செய்க.

(ஆ) திரு. லொக்கு மற்றும் திரு. பொடி ஆகியோர் மாஸியானா என்ற அரசுக்கருகில் அமைந்துள்ள சோமேரியா என்ற அரசின் முறையே நிறைவேற்று அதிகாரங்கொண்ட சனாதிபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சர் ஆவர். மாஸியானாவிலுள்ள சர்வதேசச் சட்ட நிபுணரொருவர் நீர் என்று கருதிக்கொள்வதுடன், பின்வரும் நிலைமைகள் தொடர்பில் அபிப்பிராயப் பத்திரமொன்றினை எழுதுமாறு நீர் கேட்கப்பட்டுள்ளீர்:

(i) சோமேரியானாவிலுள்ள உள்ளூர் அரசியல் எதிர்க்கட்சியினரை படுகொலை செய்தல், சித்திரவதை செய்தல் மற்றும் ஏனைய மனிதாபிமானமற்ற செயல்கள் மூலமாக அச்சுறுத்தல் மற்றும் அடக்குமுறைக்குட்படுத்தல் என்பவற்றை திரு. லொக்கு மற்றும் திரு. பொடி ஆகியோர் திட்டமிட்டு முன்னெடுத்துவருவதாகவும் மாஸியானாவின் பிரசைகள் குழுவொன்று சாட்டுதல் செய்கின்றது. சர்வதேச மாநாடுகளுக்கு திரு. லொக்கு மற்றும் திரு. பொடி ஆகியோர் மாஸியானாவுக்கு வருகின்றபோது அவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென பிரசைகள் குழு விரும்புகின்றது.

(ii) சோமேரியாவின் அரசாங்கமானது மாஸியானாவின் தனியார் கம்பனியொன்றிலிருந்து 100 டொன் அரிசியை கொள்வனவு செய்திருப்பதுடன், அதற்குச் செலுத்தவேண்டிய தொகையினை கடந்த ஆறு மாதங்களாக செலுத்துவதற்கு மறுத்துவருகின்றது.

(iii) திரு. லொக்கு தானே மாஸியானாவுக்குச் சென்று சோமேரியன் அரசாங்கம் சார்பில் இராணுவத் தளபாடங்களையும், மாஸியானாவின் அரச விமான உற்பத்தி நிறுவனத்திடமிருந்து தனிப்பட்ட விமானம் ஒன்றினையும் கொள்வனவு செய்துள்ளார். ஆயினும், சோமேரியன் அரசாங்கமானது செலுத்த வேண்டிய தொகையினை கடந்த மூன்று வருடங்களாகச் செலுத்துவதற்குத் தவறியுள்ளது.

சர்வதேசச் சட்டத்தின் பொருத்தமான அதிகார ஆதாரங்களைச் சுட்டிக்காட்டி அபிப்பிரயப் பத்திமொன்றை எழுதுக.

6. ‘இஸ்பக்கற்றி’ சமுத்திரத்தில் அமைந்துள்ள இரண்டு அரசுகளே ‘மைசூரி’ மற்றும் ‘பொடெடோவா’ என்பனவாகும். பொடேடோவாவினது தென்பகுதியில் பெருந்தொகையினராக வாழுகின்ற பாபாக்கா என்ற சிறுபான்மை இன சமுதாயக்குழுவொன்றுடன் மைசூரி தொடர்புகளைக் கொண்டுள்ளது. கல்வி மற்றும் அரச நிறுவனங்களில் வேலைவாய்ப்புக்கள் வழங்குதல் என்பவற்றில் பாபாக்கா மக்களுக்கு இனரீதியான பாரபட்சத்தை பொடேடோவா அரசாங்கமானது காட்டிவருவதான தகவல்களை மைசூரியின் புலனாய்வுப் பணியகமானது பெற்றுக்கொள்கின்றது. பாபாக்கா மக்கள் பெருந்தொகையாக வாழுகின்ற பிரதேசங்களிலுள்ள சிறுவர் பூங்காக்களில் வசதியான கல்வி உபகரணங்களைக் கொண்டுள்ள பொதிகளை வான்வழியாக மைசூரி விமானங்கள் போடுகின்றன. இச்செயலுக்கு எதிராக பொட்டேடோவா அரசானது ஆட்சேபனை தெரிவிப்பதுடன், தான் புதிதாக உருவாக்கியுள்ள ஏவுகணைகளின் வலுவினை இஸ்பக்கற்றி சமுத்திரத்தில் பகிரங்கமாகப் பரீட்சிக்கவும் தொடங்கியுள்ளது.

பாபாக்காவினது இளைஞர்களைப் பெரும்பாலும் உள்ளடக்கிய இரகசிய இராணுவ அமைப்பொன்றுக்கு மறைமுகமான இடமொன்றில் மாநிற மற்றும் அசாதாரண உயரம் என்பவற்றினால் வேறுபடுத்தியறியக் கூடியதான வகையில், மைசூரிய நாட்டின் பூர்வீகத்தையுடையவர்களாகத் தோன்றுகின்றவர்களினால் பயிற்சியளிக்கப்பட்டு வருவதனைக் காண்பிக்கின்ற மெய்நிகழ்வுத் தொகுப்பொன்றை ஜீமா என்ற நாட்டிலிருந்து தொழிற்பட்டு வருகின்ற அல் ஸிபாசா வானொலிக் கூட்டுத்தாபனமானது ஒலிபரப்புகின்றது. அதனை உடனடுத்து, போடேடோவா பொலிஸாரினால் ஆயுதந்தாங்கிய பாபாக்கிய இளைஞர் குழுவொன்று கைதுசெய்யப்படுவதுடன், அவர்களின் உடமையிலிருந்த ஆயுதங்கள் மைசூரி நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டவை என்பதும் பின்னர் கண்டறியப்பட்டது.

மேலுள்ள நிலைமையிலிருந்து எழுகின்ற சர்வதேசச் சட்டத்தின் கீழான விளைவுகள் எவை? சர்வதேசச் சட்டத்தின்கீழ் அவர்களுக்குள்ள உரிமைகள் மற்றும் கடப்பாடுகள் தொடர்பாக இரண்டு அரசுகளுக்கும் ஆலோசனை கூறுக. பொருத்தமான அதிகார ஆதாரங்களினால் உமது விடையினை ஆதாரப்படுத்துக.

7. ‘போலார்’ என்ற அரசானது, மேற்குப் பெருங்கடலையும் அரைவாசி மூடப்பட்ட கிழக்குக் கடலையும் இணைக்கின்ற அந்த ஒரேயொரு கடல்வழியான ‘பெயாரிட்டா’ என்ற கால்வாயயொன்றினால் இரண்டு பகுதிகளாகப் பரிக்கப்பட்டுள்ளது. பெயாரிட்டா கால்வாய்க்குக் குறுக்கே தெருவொன்றையும் புகையிரதப் பாதையொன்றையுங் கொண்ட இணைப்புப் பாலமொன்றை போலார் அரசு கட்டத்தொடங்குவதுடன், அது போலார் அரசின் வடக்கையும் தெற்கையும் தொடர்புபடுத்தும் இணைப்புமாகும். கால்வாய்க்கு மேலாக அமைக்கப்பட்டுள்ள இந்தப் பாலத்தின் விளைவால், மேற்குப் பெருங்கடலிலிருந்து பயணிக்கின்ற பெரிய கப்பல்கள் கிழக்குக் கடலுக்குச் செல்வதற்கான கடல்வழிப் பாதையானது நிரந்தரமாக மூடப்பட்டுள்ளது.

~~மேற்குக்~~ கிழக்குக் கடலிலுள்ள தீவொன்றான மின்லாந்து என்ற அரசானது, தனது துறைமுகத்துக்கு கப்பல் செப்பனிடுவதற்காக வந்தடைகின்ற பெரிய வெளிநாட்டுக் கப்பல்களிலிருந்து வருகின்ற தனது பிரதான வருமானத்தை தான் இழக்க நேரிடும் என்பதாகத் தெரிவித்து இந்தப் பாலம் அமைக்கப்படுவதற்கு எதிராக ஆட்சேபனையைத் தெரிவிக்கின்றது. இந்தப் பாலம் அமைக்கப்படுவதனை எவ்வாறாயினும் தடுத்துநிறுத்த வேண்டுமென்றும், இந்த நோக்கத்துக்காக தனது அனைத்துப் பிரசைகளும் அர்ப்பணிக்க வேண்டுமென்றும் மின்லாந்து அரசாங்கமானது பிரகடனஞ்செய்கின்றது. மறுநாள், மின்லாந்துவிலுள்ள போலார் தூதுவராலயத்துக்கு முன்னால் தூதுவராலய ஆளணியினர் உள்ளே செல்வதனைத் தடுக்கின்றவகையில் ஆர்ப்பாட்டக்காரர் கூட்டமாக ஒன்றுசேருகின்றனர். அடுத்த சில நாட்களில், மின்லாந்துவில் வாழுகின்ற போலார் பிரசைகளுக்கு பொருட்சேதங்களையும் காயங்களையும் ஏற்படுத்துகின்ற வகையில் அவர்களுக்குச் சொந்தமான கடைகள் மற்றும் வசிப்பிடங்கள் மீது கற்களும் பெற்றோல் குண்டுகளும் வீசப்படுகின்றன. இத்தகைய சம்பவங்களை மின்லாந்துவினது பொலிஸார் புறக்கணிப்புடன் நோக்குகின்றனர். ஒரு நாளிரவு, சிறிய படகுகள் மூலமாக வந்த இனந்தெரியாத ஆயுதக்குழுவொன்று ஏவுகணைத் தாக்குதலினால் போலாரில் அமைக்கப்பட்டுவருகின்ற பாலத்தின் மீது தாக்குதலொன்றைத் தொடுக்கின்றனர். அதனால் நிர்மாணத் தளத்துக்கு கடுமையான சேதங்கள் ஏற்பட்டுள்ளதுடன், லிபிலாந்து என்ற அரசின் பிரசைகளான இரண்டு காவலாளிகளும் கொல்லப்பட்டுள்ளனர்.

லிபிலாந்து டைம்ஸ் என்ற நாளேட்டிற்கு மேலுள்ள நிலைமைகளைப் பற்றி அரசுகளின் சர்வதேசப் பொறுப்புடைமைகள் என்பது தொடர்பில் கட்டுரையொன்றை எழுதுகின்ற சர்வதேசச் சட்ட நிபுணரொருவர் நீர் எனக் கருதிக்கொள்க. அக்கட்டுரையினை எழுதுக.

************************

**UNIVERSITY OF COLOMBO, SRI LANKA**

**FACULTY OF LAW**

**BACHELOR OF LAWS FINAL EXAMINATION - YEAR III – 2017/18**

# PUBLIC INTERNATIONAL LAW

(Three Hours)

Total Number of Questions: 07

Answer any **FOUR** (04) Questions and **NO MORE**

(Candidates will be penalized for illegible handwriting )

---

1. 'Like any other system of law, international law cannot serve all the interests of all its stakeholders. It is imperfect and usually acts to entrench and perpetuate certain power paradigms At the same time, it is a reflection of the capacity of humanity to work towards a common good, to ameliorate harm and protect the vulnerable.'

   Discuss the above statement, in light of the historical context of the development of international law. Support your answer with concrete examples drawn from recent international events.

2. 'International personality not only denotes the quality of having rights and duties as well as certain capacities under the law, but also includes the competence to create the law.'

   Discuss with special reference to the *processes* by which entities which are said to have international legal personality participate in the international legal system.

3. 'Jurisdiction has traditionally been considered in international law as purely a question of the rights and powers of sovereign States. However, there may be a need for a reconceptualization of this since there is a growing recognition that in a range of circumstances the exercise of jurisdiction may be a question of duty or obligation under international law, rather than a right.'

   Do you agree? Critically analyze the above statement, citing relevant examples of the exercise of jurisdiction by States.

4. Appela, Berryna and Grapees are three States situated in the Frutica continent. Appela follows a legal tradition similar to Sri Lanka with regard to international treaty law. Berryna's State practice pertaining to the same is similar to that of the United States of America, whereas Grapees adopts a flexible approach mixing both the common law system and the continental one.

i. Appela wishes to amend its Constitution and seeks you advice on how to ensure that the legislature is bound to give effect to any treaty upon ratification/accession by the State. Advise Appela.
ii. Berryna seeks an opinion from you on how to strike a balance between judicial activism and legislative supremacy when receiving international law into the country. How do you propose that this could be done?
iii. The Government of Grapees wants to know about practices of other States to create a better system to receive international law that could ensure the benefit of international law to own citizens. Provide information, citing authorities from relevant jurisdictions.

5. **Answer EITHER (A) OR (B)**

(A) 'The realization of the need to radically reform the law relating to diplomatic immunity led to the Vienna Convention of 1961. However, it remains debatable whether diplomatic immunity is being used for its original intended objectives.'

Critically comment on the above statement, in light of the historical development of the international law of diplomatic immunity and the current need to ensure the effective functions of diplomatic missions.

(B) Mr. Loku and Mr. Podi, are respectively the Executive President and the Defense Minister of the State of Someria, which is situated next to the State of Maziana. Assume that you are an international law expert in Maziana and have been asked to write an opinion paper with regard to the following situations:

i. A citizens group of Maziana alleges that Mr. Loku and Mr. Podi have planned and carried out a campaign aimed at intimidating and suppressing the local political opponents in Someria, by resorting to murder, torture and other inhuman acts. The citizens group wants to initiate legal proceedings in Maziana against Mr. Loku and Mr. Podi during their visit to Maziana for attending an international conference .
ii. The Government of Someria has purchased 100 tons of rice from a Mazianan private company but has refused to pay the outstanding payment for the last six months.
iii. Mr. Loku personally visited Maziana and acquired military equipment on behalf of the Somerian government and a private jet from the Mazianan State Aircraft Manufacturing Organization. However, the Somerian government failed to settle these dues for the last three years.

Write the opinion paper, citing relevant authorities of international law.

6. Mysori and Potetova are two neighbouring States situated in the Spagotty Ocean. Mysori has ethnic ties with the minority Pappaka tribe who predominately live in the Southern part of Potetova. The Mysori intelligence bureau receives information that the Potetova government discriminates Pappakas people based on their ethnicity in providing education and employment opportunities in public institutions. Mysori aircraft drop some parcels which contain sophisticated educational equipment onto certain children parks in areas where Pappaka people predominantly reside. Potetova protests against this action

and start to publicly demonstrate the power of their newly developed missiles by carrying out missile tests in the Spagotty Ocean.

The Al-Shibaazza Broadcasting Corporation operating from the State of Jeema, airs a documentary which shows training being given at an undisclosed location to a clandestine military organization comprised of mainly Pappakan youth, by some people who are distinguishable due to their fair complexion and unusual height and who appear to be of Mysorian origin. A group of armed Pappakan youth are arrested by Potetova police shortly afterwards, and it is later found that the weapons in their possession are manufactured in Mysori.

What are international law implications arising out of the above situation? Advise both States, as to their rights and obligations under international law. Support your answers with relevant authorities.

7. The State of Polar is separated into two parts by the Strait of Bearia, which is the only passage connecting the Western Ocean to the semi-enclosed Eastern Sea. Polar begins to build a bridge with a road and railway line connecting across the Strait of Bearia, and which would link the North and South parts of Polar. The effect of this bridge over the strait would be to permanently close the passage to the Eastern Sea for large ships travelling from the Western Ocean.

The State of Minland, which is an island within the ~~Western~~ Eastern Sea, strongly protests against the building of the bridge, alleging that it could deprive their economy since their main earnings come from docking of large foreign ships at their ports. The Government of Minland declares that it must somehow stop the building of the bridge and that all citizens must be committed to this cause. The next day, crowds of protestors gather around the Embassy of Polar in Minland, preventing the staff from entering the premises. In the next few days there are stones and petrol bombs thrown at shops and residences owned by Polar citizens living in Minland, causing material damages and injuries. The Minland police appear to be ignoring these events. One night there is an attack on the construction site of the bridge in Polar by an unidentified armed group using small boats and rocket launchers. Serious damage is caused to the construction site and two security guards, who are both citizens of the State of Libiland, are killed.

Assume that you are an international law expert writing an article for the Libiland Times newspaper on the international responsibilities of States in the above situation. Write the article.